**தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---------------------------------------------------

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நியாயசபைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நியாயசபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள்

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது எனவும்

(ஆ) நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு விளைவற்றிருத்தல்** | | |
| 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 150,000 ஆன நிதிஏற்பாடு எவ்வித பயன்படுத்தாமலும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஆண்டின் போது அலுவலக கட்டிடத்தை மாற்றுவதற்கு கருத்திற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியாய சபையின் செயற்பாடுகளுக்காக பொருத்தமான கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் வேறு தேவைப்பாடுகள் உருவாகாமை. |
| **(ஆ) மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை** | | |
| 03 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் நிதிஏற்பாடுகளில் செலவிடப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஆண்டின் போது அலுவலக கட்டிடத்தை மாற்றுவதற்கு கருத்திற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியாய சபையின் செயற்பாடுகளுக்காக பொருத்தமான கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் வேறு தேவைப்பாடுகள் உருவாகாமை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேன்முறையீடுகள் கிடைத்து 31 வாரங்களில் செயற்பாடுகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க நியாயசபைக்கு முடியாதிருந்தது | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | முன் அனுமான தரவுகளை செயற்படுத்தும் போது எழுந்த நடைமுறைச் சிக்கலினால் உரிய வகையில் செயற்படுத்த முடியாதிருந்தது. |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது 958 மேன்முறையீடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், ஆண்டின் போது 424 மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. 17 மேன்முறையீடுகள் மீண்டும் கோரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 1399 ஆக இருந்தன. மீளாய்வாண்டின் போது 520 மேன்முறையீடுகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 879 மேன்முயைீடுகள் எதிர்வரும் ஆண்டில் தீர்வு செய்யப்பட வேண்டியிருந்தன. | மேன்முறையீடுகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தன. | உங்களது அவதானிப்பு சரியானதாகும். |

**3.3 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணனி உதிரிப்பாகங்களை கொள்வனவின் போதும் ஆண்டறிக்கையின் 110 பிரதிகள் அச்சீட்டின் போதும் பொருட்கள் விதந்துரைகள் மற்றும் ஏனைய இணங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க கிடைக்கப் பெற்றதாக உறுதிப்படுத்தப்படாமலும் பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு கையேற்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 43,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தவறாக இருப்பதை ஏற்றுக்கொள்வதுடன் இதன் பிறகு இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | டோனர் கொள்வனவிற்காக கேள்வி கோரும் போது அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.2(அ) வழிகாட்டலின் பிரகாரம் பொருட்களின் விபரங்கள் மற்றும் அளவுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.2(அ) வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைபாடு இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வதுடன் இந்நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | உருக்கு மேசைகள் திருத்தம் செய்யும் போது செயற்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்குறைபாடு இடம்பெற்றதாக ஏற்றுக் கொள்வதுடன் இந்நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | சந்தை ஒப்பீட்டு விலை முறைமையின் கீழும் நேரடி முறைமையின் கீழும் பெறுகை நடவடிக்கைகளின் போது அதற்காக ஒத்துழைக்கும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்ய முடியாத போதும் அதன் கீழ் குழுவின் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உங்களது அவதானிப்பு சரியானது என கருதி அப்பணத்தை மீண்டும் செலுத்துமாறு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் குறித்த பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

உறுப்பினரொருவருக்கு 20,000
கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| "இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நியதிகளின் நிலைமை 2017" பெயரிலான கூற்றின் பிரகாரம் 16.3 இல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் அனைவருக்கும் சட்டத்தின் நியாயத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சட்டத்தின் ஏகாதிபத்தியத்தை மேம்படுத்தும் என குறிப்பிடப்பட்டிருந்தது.நியாயசபையும் சட்டம் தொடர்பாக செயற்படும் நிறுவனமொன்றாக இருப்பதால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கிவல்லையென அவதானிக்கப்பட்டது. | அரசின் கொள்கையொன்றாக இருப்பதால் அந்நோக்கங்களை நோக்கி அடைந்து கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைவருக்கும் சட்டத்தின் நியாயத்தன்மை பெற்றுக் கொள்வதற்காக உயர்ந்த மட்டத்தில் செயற்படுத்துவதாக அவதானத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சர்வதேச மட்டத்தில் சட்டத்தின் ஏகாதிபதியத்தை மேம்படுத்துவதற்காக இந்த நியாயசபைக்கு தேவைப்பாடு காணப்படவில்லை. ஏனென்றால் இது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தேசிய தொழில் சிக்கல்களின் போது தீர்வுகளை வழங்குவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றாக இருப்பதால் ஆகும். |